ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ.அ) தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2010

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2010), மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 12]

பிற்பகல் 2-20

*மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2010)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பதர் சயீத்.

**திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று சொல்வீர்கள். அதற்காக ஆங்கிலத்தில் பேச விரும்புகிறேன். (குறுக்கீடு) The proposed legislation to include Wakf properties within the definition of "Public premises" in order to protect wakf properties from the hands of unscrupulous encroachers and anti-social elements is a very appropriate and useful measure. We welcome it.

I think the Hon'ble Minister is aware that there is already a notification dated 20-12-2007, where you have included the Chief Executive Officer of the Tamil Nadu Wakf Board as an Estate Officer within the definition of the Public Premises Act. If these two amendments have to be implemented in their right spirit, I must tell you the callousness, carelessness and the impunity with which the district officials behave must definitely be looked into and their attitude must be changed, because it is the district officials who have to come forward to help the Wakf Board to retrieve the lost properties from the encroachers. Therefore, if this amendment has to be implemented in the right spirit, the Government must issue specific instructions to the public officials, viz. the Collectors, Heads of Police Department etc. to be extremely sensitive and vigilant and to act immediately and decisively to assist the Board to retrieve these encroached wakf properties, for which this amendment is sought to be brought in.

@ 10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திருமதி பதர் சயீத்] [2010 நவம்பர் 12

I must also tell the Hon'ble Minister—the Wakf Minister is also here—that today the Wakfs are depleted of their real estate totally, because the Board is succumbing to pressure from various individuals, societies and even political parties and is handing over valuable real estate as if it personally belongs to somebody. Since you have appointed an Estate Officer and you have brought the wakf properties under the Public Premises Act, I request the Hon'ble Minister to give suitable directions to the district officials to see that these officials come forward and be vigilant and assist the Board, whenever necessary, to retrieve these lost properties. Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது "பொது வளாகங்கள்" என்பதிலே அனைத்து அரசு மற்றும் அரசு சார்ந்திருக்கின்ற நிறுவனங்களினுடைய சொத்துகளைக் குறிப்பதாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், காலப்போக்கிலே "பொது வளாகங்கள்" என்பதிலே Wakf Board சொத்து வராது என்கிற நிலை ஏற்பட்ட காரணத்தால்தான் அதிலே இப்போது திருத்தம் கொண்டு வருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைபோல, "பொது வளாகம்" என்பதிலே Wakf Board சொத்து என்பதை நாம் இப்போது சேர்த்துள்ளோம். Wakf Board சொத்துகளை சில சமூக விரோத சக்திகள் சட்ட விதிமீறல் மூலமாக அல்லது சட்ட விதிகளுக்குட்படாமல் ஆக்கிரமித்து, அனுபவித்து வருகிறார்கள். அவர்களை அங்கிருந்து வெளியேற்றி சொத்தை அரசுக்குச் சேர்ப்பதற்காகத்தான், பராதீனமாகாமல் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வருகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட நிருவாகம் இதில் மிகவும் கண்காணிப்போடு நடக்கவேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, தலைவர் கலைஞர் அவர்களின் அரசைப் பொறுத்த அளவில், கோவில் சொத்தாக இருந்தாலும், Wakf Board -சொத்தாக இருந்தாலும் அனைத்தையும் பாதுகாக்கின்ற கலைஞர் அவர்களின் அரசு, நிச்சயமாக அதிலே கவனமாக இருக்கும். இந்தச் சட்டத் திருத்தம், தேவையான சட்டத் திருத்தம்.

2010 நவம்பர் 12]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2-25

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வளாகங்கள் (அதிகாரமளிக்கப்படாத கையுடைமையாளர்களை வெளியேற்றுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ.ஆ) தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு, 2010

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) எண் 2 சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2010), 26-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத் திருத்தத்தை நிராகரிப்பது குறித்து திரு. செ.ம. வேலுசாமி கொண்டுவந்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"26-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டங்கள் (தனி வகைமுறைகள்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.